செ.வெ.எண் -14 நாள்:10.01.2018

**அரியலூர் மாவட்டத்தில் இறுதி வாக்காள் பட்டியலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப., அவர்கள் இன்று (10.01.2018) வெளியிட்டார்கள்.**

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் அரியலூர் மாவட்டத்திலுள்ள அரியலூர், ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிகளுக்கான இறுதி வாக்காளர் பட்டியலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (10.01.2018) வெளியிட்டார்கள்.

மாவட்ட ஆட்சியர் அவர்கள் இப்பட்டியலை வெளியிட மாவட்ட வருவாய் அலுவலர், அரியலூர், ஜெயங்கொண்டம் வருவாய் கோட்டாட்சியர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பெற்றுக்கொண்டார்கள்.

**பின்னர், மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

அரியலூர் மாவட்டத்திலுள்ள உள்ள 149 அரியலூர் சட்டமன்ற தொகுதி மற்றும் 150 ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதி ஆகியவற்றிற்கான வரைவு வாக்களர் பட்டியல் 03.10.2017-ம் தேதி வெளியிடப்பட்டதின் அடிப்படையில் 149 அரியலூர் சட்டமன்ற தொகுதியில் 124924 ஆண் வாக்காளர்களும், 125160 பெண் வாக்காளர்களும், 5 இதர வாக்காளர்களும் மொத்தம் 250089 வாக்காளர்கள் உள்ளனர்.

150 ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதியில் 126412 ஆண் வாக்காளர்களும், 128557 பெண் வாக்காளர்களும், 1 இதர வாக்காளரும் மொத்தம் 254970 வாக்காளர்கள் உள்ளனர். இம்மாவட்டத்தில் **251336** ஆண் வாக்காளர்களும், **253717** பெண் வாக்காளர்களும், **6** இதர வாக்காளர்களும் ஆக மொத்தம் **505059** வாக்காளர்கள் உள்ளனர்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத் திருத்தம் 2018 தொடர்பாக 01.01.2018-ஐ தகுதி நாளாக கொண்டு 18 வயது நிரம்பியவர்கள் மற்றும் வாக்காளர் பட்டியல்களில் இதுவரை பெயர் இடம் பெறாதாவர்கள் ஆகியோர்களிடமிருந்து 03.10.2017 முதல் 15.12.2017 வரையிலான காலத்தில் 149 அரியலூர் சட்டமன்ற தொகுதியில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கக் கோரி வரப்பெற்ற படிவம் 6-ல் 2323 விண்ணப்பங்களில் 2316 ஏற்பும், 7 தள்ளுபடியும் செய்யப்பட்டுள்ளது. வெளிநாடுவாழ் இந்தியர் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கைக் கோரி வரப்பெற்ற படிவம் 6A-ல் 2 விண்ணப்பங்களில் 1 ஏற்பும், 1 தள்ளுபடியும் செய்யப்பட்டுள்ளது.

படிவம் 7-ல் வரப்பெற்ற 3712 விண்ணப்பங்களில் 3516 ஏற்பும், 196 தள்ளுபடியும் செய்யப்பட்டுள்ளது. படிவம் 8-ல் வரப்பெற்ற 662 விண்ணப்பங்களில் 531 ஏற்பும், 131 தள்ளுபடியும் செய்யப்பட்டுள்ளது. படிவம் 8A-ல் வரப்பெற்ற 178 விண்ணப்பங்களில் 177 ஏற்பும், 1 தள்ளுபடியும் செய்யப்பட்டுள்ளது.

அதே போல் 150 ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதியில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கக்கோரி வரப்பெற்ற படிவம் 6-ல் 2531 விண்ணப்பங்களில் 2512 ஏற்பும், 19 தள்ளுபடியும் செய்யப்பட்டுள்ளது. படிவம் 7-ல் வரப்பெற்ற 5613 விண்ணப்பங்களில் 5289 ஏற்பும், 324 தள்ளுபடியும் செய்யப்பட்டுள்ளது. படிவம் 8-ல் வரப்பெற்ற 599 விண்ணப்பங்களில் 520 ஏற்பும், 79 தள்ளுபடியும் செய்யப்பட்டுள்ளது. படிவம் 8A-ல் வரப்பெற்ற 110 விண்ணப்பங்களில் 110-ம் ஏற்பு செய்யப்பட்டுள்ளது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத் திருத்தம் 2018 தொடர்பாக அரியலூர் மாவட்டத்தில் உள்ள 149 அரியலூர் சட்டமன்ற தொகுதி மற்றும் 150 ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதி ஆகியவற்றிற்கான இறுதி வாக்காளர் பட்டியல் இன்று 10.01.2018 வெளியிடப்பட்டதின் அடிப்படையில், 149 அரியலூர் சட்டமன்ற தொகுதியில் 124572 ஆண் வாக்காளர்களும், 124313 பெண் வாக்காளர்களும், 4 இதர வாக்காளர்களும் மொத்தம் 248889 வாக்காளர்கள் உள்ளனர்.

150 ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதியில் 125470 ஆண் வாக்காளர்களும், 126718 பெண் வாக்காளர்களும், 5 இதர வாக்காளர்களும் மொத்தம் **252193** வாக்காளர்கள் உள்ளர். இம்மாவட்டத்தில் **250042** ஆண் வாக்காளர்களும், **251031** பெண் வாக்காளர்களும், **9** இதர வாக்காளர்களும் மொத்தம் **501082** வாக்காளர்கள் உள்ளனர்.

தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின்படி புதியதாக வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கைக் கோரி விண்ணப்பித்து வாக்காளர் பட்டியலில் புதியதாக இடம் பெற்றுள்ள தகுதியான நபர்கள் அந்தந்த வட்டாட்சியர் அலுவலகத்தில் இயங்கிவரும் இ-சேவை மையங்களில் தங்களுடைய அசல் (ie., Aadhaar Card, Driving License, Passport, College Id Card …. etc) ஆவங்களை காண்பித்து இலவசமாகவும், திருத்தம் மற்றும் முகவரி மாற்றம் செய்தவர்கள் **ரூ.25/-** செலுத்தியும் வண்ண வாக்காளர் அடையாள அட்டையினை பெற்றுக்கொள்ள அறிவுத்தப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் சே.தனசேரகன், வருவாய் கோட்டாட்சியர்கள் மு.மோகனராஜன் (அரியலூர்), பி.டினாகுமாரி (உடையார்பாளையம்) மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.